[2016 ஆகஸ்ட் 12

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.*

***[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*

2. தகவல் கோரல்

போக்குவரத்துத் தொழிலாளர் ஊதிய ஒப்பந்தம் குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு என்னவென்று சொல்லுங்கள்.*

***திரு. கே.என். நேரு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத் தொழிலாளர்களின் ஊதிய ஒப்பந்தம் செப்டம்பர் 1 ஆம் தேதியிலிருந்து செப்டம்பர் 31 ஆம் தேதிக்குள்ளாக முடிக்கப்படவேண்டும். இன்னும் அதற்கான ஆயத்தப் பணிகள் நடைபெறவில்லை. ஏற்கெனவே அறிவித்த 12—வது ஊதிய ஒப்பந்தத்தில் 5.5 சதவீதம் ஊதிய உயர்வு அறிவிக்கப்பட்டது. அந்தத் தொகையும் இன்னும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை. எனவே அதுகுறித்து. . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு, இன்று காலையில்தான் நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். என்னிடம் வந்து 'தகவல் கோரல்', என்ற முறையில் கேட்கிறேன் என்று சொன்னீர்கள். இப்போது கேட்டுவிட்டீர்கள்; அதை நான் பதிவு செய்துவிட்டேன். நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், இதற்கு உங்களிடம் பதில் இருக்கிறதா? (குறுக்கீடு) உட்காருங்கள். தகவல் கோரல்தானே? அப்படியிருந்தால்தான் நான் அனுமதிப்பேன்.*

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே போடப்பட்ட ஒப்பந்தம் இந்த மாதம் இறுதி வரை நடைமுறையிலே உள்ளது என்பதையும், இந்த வினாவை எழுப்பியிருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தத் துறையினுடைய அமைச்சராக இருந்தவர். அவருக்கு நன்றாகவே தெரியும். சென்ற தி.மு.க. ஆட்சிக் காலத்திலே 1—9—2010—லே போடப்படவேண்டிய ஒப்பந்தத்தை, ஆறு*

2016 ஆகஸ்ட் 12] [திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்]

மாதங்களுக்குப் பின்னர்தான் இறுதி செய்தார்கள் என்பதை இந்தப் பேரவையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

3. கவன ஈர்ப்பு

பஞ்சு விலை ஏற்ற இறக்கத்தினால் ஜவுளித் தொழிலில் ஏற்பட்டுள்ள பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசர பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பஞ்சு விலை ஏற்ற இறக்கத்தின் காரணமாக ஜவுளித் தொழிலில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்:** *இதுகுறித்து விரிவான விவர அறிக்கை ஒன்று பேரவைமுன் வைக்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

அறிக்கை

இந்திய ஜவுளித் தொழிலானது, நாட்டில் விவசாயத்திற்கு அடுத்ததாக, அதிக வேலைவாய்ப்பு வழங்கும் இரண்டாவது மிகப் பெரிய தொழிலாக விளங்குகிறது. ஜவுளித் தொழிலானது, தொழில் உற்பத்தியில் 14 விழுக்காடு அளவிற்கும், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4 விழுக்காடு அளவிற்கும், நாட்டின் ஏற்றுமதி வருவாயில் 11 விழுக்காடு அளவிற்கும் பங்களித்து, நாட்டின்